# தனி மனிதனும் சமுதாயக் கடமையும்

- யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி

இன்றைய உலகத்திலே, பிற துறைகளைப் போலக் கல்வி முறையிலும் ஆராய்ச்சியோடு கூடிய தனிக்கவனம் (Specialization) வளர்ந்து வருகின்ற காரணத்தாலே எத்தனையோ வகையான கல்விகள் வந்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். முதியோர் கல்வி என்பது அதிலே ஒன்று. இந்த முதியோர் கல்வியிலே அகர வரிசை ஆனா, ஆவன்னா கற்றுக்கொடுப்பதற்குப் பல இடங்களில் பாடங்களை வகுத்துள்ளார்கள். இன்றைய நிலைமையிலே இது தேவையே இல்லை. வாழ்க்கையைப் பற்றி அதாவது எவ்வாறு வாழ்வது என்ற கல்விதான் இன்று மூத்தோருக்கும் முதியோர்களுக்கும் தேவை. ஏனென்றால் நீண்டகாலமாக இந்த நாடு அந்நியர் ஆட்சியிலே இருந்ததனாலே எந்த முறையிலே இந்நாட்டு மக்கள் வாழ வேண்டும், அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு வெளி நாட்டு ஆட்சியாளர்கள் செயல்படவில்லை. அவர்கள் நோக்கமே வேறாக இருந்தது. ஆனால் சுதந்திரம் பெற்ற பிறகு நமது மக்களது வாழ்க்கையிலே என்னென்ன குறைபாடுகள் உள்ளன என்று அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நாம் சொல்லும்போது அந்த அரசாங்கம் நமக்கு அப்பாற்பட்டதாக உள்ளதா என்று பார்த்தால், நாம் எல்லோரும் கூடியல்லவா அரசாங்கத்தை அமைக்கின்றோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் மக்கள் எந்த அளவிலே, அறிவிலே, திறமையிலே, பண்பாட்டிலே உயர்ந்து இருக்கின்றார்களோ அந்த அளவிற்குத்தான் அரசாங்கம் அமையும். பல ஆண்டுகளுக்கு முன்னரே நான் எழுதிவைத்தேன் ‘Even as water finds its own level, the culture of the people will find its own form of Government’, என்று அதாவது தண்ணீர் எவ்வாறு அதன் நிலையை அறிந்து

கொள்ளுகின்றதோ, அதேபோல மக்களுடைய பண்பாடுதான் தக்க அரசியலை வகுத்துக் கொள்ளும். எந்த அளவிலே அந்தப் பண்பாடு இருக்கின்றதோ அதற்குத் தக்கவாறு அரசியல் அமையும். அந்தப் பண்பாடு உயர்ந்தோ, தாழ்ந்தோ செல்லுங்காலை அரசியல் அதற்கு ஒத்து வரவில்லையானால் அங்கே புரட்சியிருக்கும். அந்தப் புரட்சியானது கால அளவில் எதுவரையிலே நீடிக்கும் என்றால், மக்கள் பண்பாடும் அரசியல் முறையும் மீண்டும் ஒன்றுபடும் வரையிலே அந்த நாட்டிலே புரட்சி இருந்துகொண்டுதானிருக்கும்.

இந்தப் பின்னணியில் தேசத்து நடப்புகளைப் பார்க்கும்போது மக்கள் பண்பாடுதான் தேவை என்பது தெரியவரும். அந்த நோக்கத்தோடு முதியோர் கல்வித் திட்டத்திலே, வாழ்க்கை என்பது என்ன என்பதைப் புரிந்துக் கொள்வதற்காகக் கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டியது அவசியம்தான். பொது நல நாட்டம் கொண்டு அறிஞர் பெருமக்கள் கூடிச் சிந்தித்து அதைச் செயலுக்குக் கொண்டு வரலாம். நாம் எங்கோ ஒரு மூலையிலிருந்துக் கொண்டு என்ன செய்யப் போகின்றோம் என்று எண்ண வேண்டாம், கொழுந்துவிட்டு எரிகின்ற ஒரு பெரிய நெருப்பை உண்டுபண்ணுவதற்கு ஒரு சிறு நெருப்புப் பொறியே போதுமானது. இதேபோல உலகத்திலே இதுவரையில் நடந்த பெரும் பெரும் திருத்தங்கள், திருப்பங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்தீர்களேயானால், ஒரு மனிதனிடம் தோன்றிய கருத்து தொடக்கமாக இருக்கும் அதன்பிறகு பலர் அதனை ஆதரித்தார்கள். பின்பு பரவியது, பிறகு செயலாகியது. இதேபோன்று மக்கள் பண்பாடு உயர வேண்டும். இந்தச் சிந்தனையிலே நான் பல ஆண்டுகள் என் மனதைச் செலுத்தி வந்தேன். பல கட்டுரைகளை இந்த சமுதாய நலத்திற்காக எழுதியதும் உண்டு. ஆனாலும் பரவலாக அவற்றைப் படித்தார்களில்லை.ஏதோ ஒருவர் எழுதுகின்றார் என்று விட்டு விட்டார்கள். அந்தக்

காலத்திலேயே இந்த நாடு போய்க்கொண்டிருக்கும் போக்கைக் கண்டு இது எங்கே போகின்றதென்று மனம் துடித்தது அரசியல் போதை என்ற தலைப்பின்கீழ் அன்று ஒரு கட்டுரை எழுதி, அந்தக்கட்டுரைக்கு மேலாக இந்தக் கவிதையையும் கொடுத்திருக்கிறேன்.

*"வாழத் தெரியாதோர் பெரும்பாலோர் வாழ்நாட்டில்*
*ஆளத் தெரியாதோர் ஆட்சியோர் நடைபெறும்*
*கோழை, கயவர், கொலைஞர், தடியர்கள்,*
*ஏழை, நோயுற்றோர் எங்குமே காட்சியாம்."*

சுதந்திர ஆட்சி வந்துவிட்ட பின்னரும் மக்கள் வாழும் வகையை முறையைத் தெரிந்து கொள்ளவில்லையானால் எத்தகைய ஆட்சி அமையும்? ஆளத் தெரியாதோர் ஆட்சிதான் வரும்.

ஆகவே இப்பொழுது என்ன வேண்டும் என்றால், அரசியல் மாறவேண்டும். அரசியல் இன்றி மனித வாழ்வு உயராது, ஆனால் அதனை வகுக்கின்றவர் யாரெனில் சுதந்திர நாட்டிலே மக்கள்தான் வகுக்கின்றார்கள். எனவேதான் சொன்னேன் மக்கள் பண்பாடு உயர வேண்டும் அந்தப் பண்பாட்டிலே, பொருள்வயப்பட்ட பண்பாடு மாத்திரம் போதாது. பொருள் இருந்து அறிவு இல்லையேல் என்னவாகும் எனில் குழப்பமும், புரட்சியுமே உண்டாகும். அதே போன்று அருளிருந்து பொருளில்லையேல் அடிமை ஆண்டி அருள் இருந்து பொருளில்லாமற் போனாலும் இயலாது பொருளிருந்து அருள் இல்லாமல் போனாலும் இயலாது. ஆறாவது அறிவைப் பெற்ற மனிதப் பிறவியின் நோக்கமே, அறிவை அறிந்து அதன் மூலமாகப் பிரபஞ்ச இயக்க விதி உணர்ந்து சமுதாய நலனறிந்து, தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைக்கக்கூடிய அளவிற்குத் தொண்டாற்றி நிறைவு பெறுவதுதான் மனித வாழ்க்கையினுடைய நோக்கம், அறிவை

அறிய வேண்டும, அறிவை வளர்க்க வேண்டும் என்பதுதான் முதல் பெருநோக்கமாகும். அறிவை உயர்த்துவதற்கு என்ன வேண்டும் என்றால் உடல் வேண்டும்? உணவு, உடை, இருப்பிடம் இன்னும் மற்ற பொருட்கள் எல்லாம் தேவை. பிறந்தது முதற்கொண்டு பதினைந்து, பதினாறு ஆண்டுகள் வரையிலே எந்த மனிதனும் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்ய முடிவதில்லை. பத்தாவது வயதிலேயே சில குழந்தைகள் பணியில் ஈடுபடுகின்றார்கள் என்றாலும் அது சமுதாயம் செய்கின்ற தவறாகும். சாதாரணமாகப் பதினைந்து பதினாறு வயதிற்குப் பின்னரே ஒருவன் சம்பாதிக்கத் தொடங்குகிறான். அதுவரையிலே அவனை வளர்த்தது யார் என்றால் இந்த சமுதயாம்தான் வளர்த்தது. சமுதாயம்தான் ஒவ்வொரு மனிதனையும் வளர்த்து வருகின்றது. அதேபோன்று நோய், முதுமை வந்தது என்றால் அப்பொழுதும் சமுதாயம்தான் அவனுக்கு உதவவேண்டியுள்ளது.

## சமுதாயத்திற்குக் கடன்பட்டுள்ளோம்

எனவே இந்தச் சமுதாயத்திலே எவ்வாறு ஒவ்வொரு தனி மனிதனும் பங்குபெற வேண்டும் என்றபோது, அந்த அளவிற்கு அறிவு உயர்ந்தால்தான் இயலும். மனிதகுலம் வாழ வேண்டும். மனிதகுலத்தினுடைய வாழ்க்கையின் நோக்கம் அறிவை அறிய வேண்டும். இதற்கு உடல் வேண்டும். உடலைக் காக்கும்போது பொருள் வேண்டும். இவ்வாறு பொருட்கள் வேண்டுமானால், இந்த ஒருபிடி உணவிலே உலக ஒற்றுமைக் கண்டிடு, உழைப்பினால் பதில் உலகிற்குத் தந்திடு என்று மாக்கோலம் என்ற நூலிலே சிறு கவியை எழுதியிருக்கிறேன். ஒரு பிடி உணவைக் கையிலே எடுத்துப் பார்த்தீர்களேயானால், அத்தனைக் கோடி மக்களுடைய ஒற்றுமை அந்த ஒரு பிடி உணவிலே இருப்பதைக் காணலாம். அந்த அரிசியை விளைவித்தவர்கள், அந்த அரிசி

விளைவதற்குரிய நிலத்தைப் பண்படுத்தியவர்கள் அதைப் பண்படுத்துவதற்கு வேண்டிய கருவிகள் செய்தோர் இதுபோல இன்னும் பலவற்றை எடுத்துப் பார்த்தீர்களேயானால், இந்த உலக விரிவான பல மக்களும் அதிலே அடங்கி இருக்கக் காண்கின்றோம். இவ்வாறு நம்முடைய ஒவ்வொருநாள் வாழ்க்கைக்கும் பலகோடி மக்கள் இணைந்திருக்கின்றார்கள். ஆகவே என்ன செய்ய வேண்டுமெனில் ஒவ்வொருவரும் தனக்கு வயது வருகின்றபோது, அதே சமுதாய வளம் காப்பதற்கு அறிவாலோ, செயலாலோ தொண்டு செய்ய வேண்டும் தன்னுடைய உழைப்பை நல்க வேண்டும். அப்பொழுதான் சமுதாய நலம் எப்பொழுதும் நிறைவாக இருக்கும், குறைவு படாமல் இருக்கும். இந்தக் கருத்தைத்தான் வள்ளுவர் குறிப்பாகச் சொல்லியுள்ளார்.

*நெருங் கடலும் தன்னீர்மை குன்றும் தடித்தெழிலி*
*தான் நல்கா தாகிவிடின்*

என்ற குறட்பாவில் இதன் பொருள் மேகம் (ஆவியாக) எடுத்துச் சென்ற தண்ணீரை மீண்டும் (மழையாகத்) தாராது விடுமாயின், பெரிய கடல்கூடத் தன் வளத்தை இழந்து நிற்கும். என்பதாகும்.

இவ்வாறு வாழப் பிறந்தவர்களெல்லாம் முதல் படியிலே, அந்த 15 ஆண்டுகள் வரையிலே வாழக கற்றுக் கொள்ள வேண்டும் கற்றுக் கொள்வது என்பது (1) எழுத்தறிவு, (2) தொழிலறிவு, (3) இயற்கைத் தத்துவ அறிவு, (4) ஒழுக்க பழக்கங்கள் ஆகிய இந்த நான்கு வகையான கல்வியையும் பெறவேண்டும். இதைப் பெற்றபிறகு இவற்றைச் செயல்படுத்த முனைய வேண்டும். அங்கே தான் ஒவ்வொரு மனிதனும், காலையிலிருந்து மாலை வரையிலே எடுத்துப் பார்த்தீர்களேயானால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்களுடைய கூட்டுறவினாலேதான் வாழ்ந்து வருவது தெரியவரும்.

அப்பொழுது நானும் என்னுடைய கடமையைச் செய்வேன் என்ற உணர்வு வந்தபிறகு, ஒவ்வொரு மனிதனும் பதினைந்து ஆண்டுகள் வரையிலே தான் சமுதாயத்திற்கு ஏதும் செய்தேனில்லை, அதுவரையிலே சமுதாயம்தான் எனக்குக் கொடுத்து உதவி வந்தது. இன்றைக்குக்கூட காலை முதல் மாலை வரையிலே எல்லாப் பொருளையும் கொடுத்து உதவி வருகின்றது. இந்த சமுதயாத்திற்கு நான் கடன்பட்டு இருக்கின்றேன். அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு என்னுடைய உழைப்பை நல்கிக் கொண்டே இருக்க வேண்டும், தொண்டினை ஆற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு வந்துவிட்டதேயானால் அது தான் கடமை. அதாவது 'கடன்' என்ற சொல் 'மை' விகுதி பெற்றுக் கடமை என்றானது. ஆங்கில மொழியிலும் 'Due' என்ற சொல்லிலிருந்து தான் 'Duty' என்று வந்தது. எப்பொழுதும் சமுதாயத்திற்குதான் தனி மனிதன் ஒவ்வொரு மனிதனையும் காப்பது சமுதாயமே. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திலே இணைந்து கொண்டு, சமுதாயத்தை வளமுறச் செய்து, சமுதாய முதலீடு (social capital) குறையாது பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன வேண்டும் என்றால் அற உணர்வு வேண்டும். அறம் எனப்படுவது ஒழுக்கம், கடமை, ஈகை இந்த மூன்றும் சேர்ந்ததுதான். எந்தச் செயல் செய்தாலும் அதன் விளைவாக ஏதோ ஒரு இன்பமோ துன்பமோ எழும். இது இயற்கை நியதி. எச்செயல் செய்தாலும், அதாவது சொல், செயல், எண்ணம் ஆகிய எதுவானாலும் சரி, அதற்குரிய விளைவு உண்டு. இது தான் இயற்கையின் நியதி அல்லது இயற்கையின் இயல்பு. இதை அறியும்போது, இந்தச் செயலை நான் செய்கின்றேனே, இதனுடைய விளைவு எதுவாக இருக்கும்? சோம்பேறியாய் இருந்தேன் என்றால் என்ன விளையும்? என்று இவ்வாறெல்லாம் பார்க்கின்றபோது அந்த விளைவானது தனக்கும், பிறருக்கும் நன்மையாகவே இருக்க வேண்டும். துன்பம் எழாமல் இருக்க வேண்டும் என்ற அளவிலே

அதைக் கணித்துச் செய்யும் போது அது ஒழுக்கம். உயிர்கள் படும் துன்பத்தைப் போக்க வேண்டும் என்று எண்ணி, அதற்காகச் செய்யும் காரியங்களெல்லாம் ஈகை. ஒழுக்கம் என்பது துன்பம் எழாமல் காத்தல், ஈகை என்பது இருக்கும் துன்பத்தைப் போக்கும் முயற்சி அல்லது போக்கும் செயல். இதனால்தான் வள்ளுவர் பெருமான்,

*ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு*

என்றக் கவியைக் கொடுத்திருக்கின்றார். ஈதல் என்பது ஈகை, உயிர்படும் துன்பத்தைத் தீர்ப்பதற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள். இதன் மூலமாகத்தான் இசைபட வாழ்தல் இது தான் ஒழுக்கம் - இசைந்து வாழ்வது, பிறருக்குத் துன்பம் இல்லாமல் வாழ்வது, யாருக்கும் கேடின்றிச் செயல்படுவது. ஈதல் இசைபட வாழ்தல் இவ்விரண்டும்தான் அவசியம் தேவை. இதோடு சமுதாயம் ஒவ்வொரு மனிதனையும் காத்து வருவதனாலே, ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்குப் பிரதிபலனாக தன்னுடைய உழைப்பை நல்கி, சமுதாய வளம் காத்து வரவேண்டும். இதுவே கடமை, இந்த மூன்றம் எந்த நாட்டிலே எந்த மனிதனிடத்திலே குறைவாக இருக்கின்றனவோ அந்த இடத்திலே, அந்த அளவிலே குழப்பம் இருக்கும்.

ஆகவே அமைதியும், இன்பமும், மகிழ்ச்சியும் ஒரு சமுதாயத்திலே நிலவ வேண்டுமானல் ஒழுக்கம், கடமை, ஈகை ஆகிய இந்த மூன்றும் தேவை. இந்த மூன்றையும் தெரிந்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிந்து கொள்வதற்குத் தான் தத்துவம் வேண்டுமென்று கூறுவார்கள். தானாகவே இந்த உண்மையை உணர்ந்துக் கொண்டு அந்த அற உணர்வு இயல்பாகவே தோன்றும்போது, அவனே அதை உணர்ந்து செய்கின்றான் அல்லவா, இதைத்தான் ஞானம் என்று கூறுவார்கள். இவ்வாறு அதை உணர்ந்து செய்ய

முடியவில்லை என்றாலும் அப்பொழுது செய்கின்ற செயலுக்கு விளைவு உண்டல்லவா? இந்த நிலையில் இருப்போர் பெரியவர்களை நம்பி, அதனைப் பின்பற்றிச் செய்யும்போது அது பக்தி ஆகும். பக்தி என்றால் பிறர் சொல்லைக் கேட்டு, அவர்களுக்கு அடங்கி அவர்கள் வழியினைப் பின்பற்றி நடப்பது. தானே தெரிந்து கொண்டு நெறியோடு வாழ்வது ஞானம்.

ஆகவே ஒன்று ஞானம் இருக்க வேண்டும், இல்லையெனில் பக்தி இருக்க வேண்டும். இந்த பக்தியாலோ, ஞானத்தாலோ செயலின் தன்மை என்ன என்றால், செயல் இரண்டும் ஒன்றுதான். ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்று உறுப்புகள் இணைந்த அறம் தான் வேண்டும். ஆகவே இந்த அறத்தைப் பாதுகாப்பதற்கு என்ன வேண்டுமெனில், ஒவ்வொரு மனிதனும் பிறந்திருக்கின்றான், அவன் அறிவிலே முன்னேறிவர வேண்டியதுதான் பிறவியினுடைய நோக்கம் இதுதான் இயற்கையினுடைய இயல்பு, அது கெடக் கூடாது. அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்கின்றபோது, தனி மனிதன் காப்பு என்பது அங்குதான் உண்டாகின்றது. உலகம் முழுவதிலும், மேல் நாட்டிலேகூடப் பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்று தனிமனிதனுடைய சுதந்திரத்தைப் பற்றி நீங்கள் கேட்கின்றீர்கள் சுதந்திரம் இருக்கின்றது அந்த சுதந்திரத்தைக் காப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கின்றபோது, கட்டுப்பாட்டினால்தான் சுதந்திரம் உண்டாகும். பிறர் சுதந்திரத்தை அழித்துவிடக் கூடாது என்ற ஒரு பேருணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் வந்து அவனுடைய செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும், போதுதான் சுதந்திரம் எல்லோருக்கும் கிட்டுமே தவிர, சுதந்திரம் என்பது தானாக விரும்பும் காரியத்தை எல்லாம் தங்கு தடையின்றிச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு என்று வைத்துக்கொள்வது தவறாக கருத்தாகும். ஆகவே சுதந்திரம் என்பது உண்மையான எல்லோருக்கும் வேண்டுமானால்,

பிறருடைய சுதந்திரத்தை நாம் காக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளக்கூடிய கட்டுப்பாடுகளில்தான் எல்லோருடைய சுதந்திரமும் காக்கப்படும் ஒவ்வொரு தனி மனிதனுடைய பாதுகாப்பும் அமையும்.

### தன்னிறைவுக்கான வழி

மேல் நாட்டிலே கூட இந்தியாவை ஏழை நாடு, ஏழை நாடு என்று கூறுவதுண்டு. உண்மையிலேயே இந்தநாடு ஏழைநாடு அல்ல, இந்த நாட்டிலே என்ன குறைவு? இதைத்தான் நான் உங்களிடம் கேட்கின்றேன், இயற்கை வளத்திலே குறைவா, மக்களுடைய அறிவிலே குறைவா, அல்லது ஞானத்திலேதான் இந்நாடு குறைந்து விட்டதா? எவ்விதக் குறைபாடும் இல்லை. இன்று இந்திய நாட்டிலே படித்துப் பட்டம் பெற்ற விஞ்ஞானிகள் உலகம் முழுவதும் சிறந்து விளங்குகின்றார்கள். இத்தகைய முறையிலே இன்று இந்திய நாடு எல்லா நாடுகளுக்கும் விஞ்ஞானிகளை ஏற்றுமதி செய்துகொண்டு இருக்கின்றது என்றால் இது தவறல்ல. நான் நேரடியாகச் சென்றுப் பார்த்ததைத்தான் கூறுகின்றேன். இந்த முறையிலே இந்நாட்டிலே விஞ்ஞான அறிவானது அந்த அளவிற்குத் ததும்பி இருப்பதைக் காண்கின்றோம். இவ்வாறு இருந்தும் என்ன குறைபாடு என்று கூறினால், அரசியல் முறையிலே இருக்கக் கூடிய ஊழல்கள்தான் இதற்குக் காரணம். ஒழுங்கான அரசியலை நம்மாள் அமைத்துக் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் அந்திய நாட்டு ஆட்சியிலே பட்ட பண்பாடானது அப்படியே தொக்கி நிற்கின்றது. இன்னும் நமக்கேற்ற முறையிலே நாம் வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளவில்லை.

வாழ்க்கையை தெரிந்துக் கொள்ள வேண்டுமானால், வாழ்வாங்கு வாழ வேண்டுமானால், ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து துறைகளிலே அறிவு வேண்டும்.

அவை (1) அறிவு, (2) சுகாதாரம், (3) பொருளாதாரம், (4) அரசியல், (5) விஞ்ஞானம் ஆகிய ஐந்தும் வாழ்க்கைத் தத்துவங்கள். வாழ்க்கைக்கு இந்த ஐந்தும் தேவை. ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்திலேயும் நிறைவு பெற வேண்டும். சிறு குழந்தை முதற்கொண்டு 15, 20 ஆண்டுகள் வரையிலே இந்த ஐந்து துறைகளிலும் அறிவு பெற வேண்டும். அதன்பின்பு வாழ்க்கையிலே புகுந்தால் தன்னிறைவாக இருக்கும். யாரிடமும் ஒன்றும் கேட்க வேண்டியதே இல்லை. எல்லாவற்றையும் அவரவரே உணர்ந்து திருந்தி அவர்கள் செயல்பாடுகளைச் செய்வதற்கு நல்ல வாய்ப்பிருக்கும்.